உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ச.] 1915௵ பிபர்வரி௴, [பகுதி உ.

## கடோபநிஷத்து.

1-வது அத்தியாயம் 2-வது வல்லி

1-வது மந்திரம்.

மோட்ச சாதனம் வேறு, போக சாதனம் வேறு, இவ்விரண்டும் வெவ்வேறு பிரயோசன முள்ளவைகளாய்ப் புருஷனைக் கட்டுப்படுத்துகின்றன. அவைகளுக்குள் மோட்ச பிரயத்தனம் செய்கிறவனுக்குச் சுபமுண்டாகிறது. எவன் போகசாதனம் விரும்புவானோ அவன் புருஷார்த்தத்தினின்றும் விலகிப்போகிறான்.

உ மோட்ச சாதனமும் போகசாதனமும் மனிதனை யடைகின்றன. புத்திசாலியானவன் அவைகளை நன்காலோகித்து வேறுபடுத்துகிறான்; புத்திசாலி போகசாதனத்தைக் காட்டிலும் சிரேஷ்டமான மோட்சசாதனத்தை விரும்புகிறான். மந்தபுத்தியுள்ளவன் யோகக்ஷேமத்திற்காகப் போகசாதனத்தை விரும்புகிறான்.

ங ஓ நசிகேதசே! நீ (என்னால் கொடுக்கப்பட்ட) அந்தப் பிரியமாயுள்ள ஸ்திரீ முதலிய போகங்களையும் ஆலோசித்தவனாய் விலக்கி

விட்டாய். எதில் அனேக மனிதர்கள் முழுகினுர்களோ (இச்சிக்கிறுர்களோ அந்த) தனமான மாலையை நீ அடையவில்லை.

௪ அவித்தை யென்றும்,எது வித்தை யென்றும் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறதோ இவ்விரண்டும் தூரமாய் விபரீதமாய் வெவ்வேருகின்றன. நசிகேதசு வித்தையைக் கோருகிறவனுக நினைக்கிறேன். அனேக விச்சைகள் உன்னை யாசைப்படும்படி செய்யவில்லை.

௫ தாங்களே புத்திமான்களாகவும், தாங்களே பண்டிதர்களாகவும் நினைத்துத் தீயமார்க்கத்தில் பிரவேசிக்கிற அவிவேகிகள், எங்ஙனம் குருடனுலே நடத்தப்பட்ட குருடர்கள் பிரமிக்கிறுர்களோ அங்ஙனம் பிரமிக்கிறுர்கள்.

௬ கலக்கமான மனதையுடையவனும், விஷயவாசை யுடையவனுயுமுள்ள மூடனுகிய பாலனுக்குப் பரலோகம் விளங்குவதில்லை, இவ்வுலகமே யிருக்கிறது,பரலோக மில்லையென்று நினைக்கிறவன் அடிக்கடி என்வசத்தை (யமலோகத்தை) யடைகிறுன்.

௭ அனேகர் கேட்டிருந்தாலும் எந்தப் (பர) மாத்மாவை அறியவில்லையோ அந்தப் பரமாத்மாவை யறிந்து விவகரிப்பவன் அரிது, அவனை யடைகிற நிபுணன் அரிது, நிபுணனு லுபதேசிக்கப்பட்டு அவனை யறிகிறவனு மரிது.

௮ அனேகமான சிந்தையை யுடைய பிராகிருத மனிதனுல் * இந்தப் பரமாத்மா நன்ருய்த் தெரிந்து கொள்ளத்தக்கவனல்ல. அனன்னிய பாவனை யுடையவனுல் உபதேசிக்கப்பட்ட பரமாத்மா விஷயத்தில் அனேக சிந்தனை யுண்டாவதில்லை, அப்பரமாத்மா அணுவினுமணுவானது, தர்க்கத்தா லூகிக்கத்தகாதது.

---

* "அவரேணநரேண" (பிராகிருத மனிதனுல்) என்றதில் அவர சிவன் முதலானவர்களைவிட பகவான் சிரேஷ்டன், பகவானை உத்தேசித்துச் சிவன் முதலானவர்கள் அவரவர்கள் (பிராகிருதர்கள்) 'நரேண=சைவ பிரம்ம காணுபத்திய முதலிய மனிதர்களால்' எனவியாக்கியானம் மத்துவாசாரியர் வரைந்தனர். இவர் வேதவாராய்ச்சி செய்யாதவராய், இராமானுஜ பாஷ்யத்தையே படித்து அதில் சிலவரிகளைக் கூட்டியும் கழித்தும் சுருக்கியும் பெருக்கியு மெழுதித் தாமுமொரு பாஷ்யகாரராக வெளிவந்தவரெனத் தெரியவருகிறது. இவரது துவைத கொள்கையை விசாரித்து அது வேதபாகியமெனப் "பகவத்கீதார்த்த பங்கத்தில்" தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

௯ பிரியமான நசிகேதசே! எப்புத்தியை நீயடைந்தாயோ இந்த ஞானம் யுக்தியா லடையத்தக்கதல்ல, அந்நிய வாச்சாரியனால் சொல்லப்பட்ட நல்ல ஞானத்தா லுண்டாவது, (நீ) சத்தியமுள்ள தைரியவானாக வாகிறாய், இஃதாச்சரியம், ஓ நசிகேதசே! உன்னைப் போன்ற சிஷ்யன் எங்கட்குண்டா கட்டும்.

௧௦ நிதி முதலிய நித்தியமல்லவென்று நான் அறிகிறேன், அநித்திய திரவியங்களால் நித்தியமான அப்பரமாத்மா அடையப்படுவதில்லை, நசிகேதசு அக்னியானது (பிரமசாதனமாக) நித்யமல்லாத திரவியங்களால் நிறைவேற்றப் பட்டிருக்கிறது, அதனால் நான் நித்தியத்தை யடைந்தேன்.

௧௧ ஓ நசிகேதசே! இச்சையின் பிராப்தியாயும், உலகத்தின் பிரதிஷ்டையாயும், உபாசனையின் பலனாயும், அந்த மில்லாததாயும், பயமற்ற எல்லையாயும், துதிக்கத்தக்கதாயும், விஸ்தீரண கதியுள்ளதுமான பரமாத்மாவைப் பார்த்து, ஞான முள்ளவனாய், தைரியத்தினால் (யாவையும்) விலக்கி விட்டனை.

---

நிற்க, "நமஸ்தேருத்ரமன்யவே" என எஜுர்வேதமும், "நமோருத்ரமன்யவே" எனருக்வேதமும், "ருத்ராயதேநம:" எனஸாமவேதமும், "ருத்ராயஸ்தருத்ராய" என அதர்வணவேதமும், "காரணந்துத்தேயச்சம்பு" என அதர்வ சிகோபநிஷத்தும், "அத்வைதம் சதுர்த்தம்ப்ரஹ்மவிஷ்ணு ருத்ராதீதமேகமாசாஸ்யம் பக்வந்தக்சிவம்" எனப் பஸ்மஜாபாலோப நிஷத்தும் இன்னும் ஆயிரங்கணக்கான சைவவிஜய துவஜங்களையேந்தி விளங்கும் வேதம் கொண்டாடி மகிழும் சிவபரஞ்சுடரை அவரன் (பிராகிருதன்) எனவும்,

"தியாதா" எனவும், "நகாரணம்" எனவும், "வாசுதேவா:ப்ரக்ருதி" எனவும்; "ப்ரஹ்மவிஷ்ணவீசாநேந்த்ராதீநாம் நாமரூபத்வாராஸது லோஹமித்யத்யாஸவசாஜ்ஜீவ:" எனவும், "ப்ரகிருதி: பரமோவிஷ்ணு:" எனவும், "யோநிஜனார்தநா!" எனவும், "விஸ்வம்நாராயண:" எனவும் கூறி வேதத்தால் தீர்மானித்தபிராகிருத மூர்த்தியைப்பகவானெனவும்சுருதிவிருத்தமாகமத்துவாசாரியர் எழுதிவைத்த அசத்துரை வைதிக சதசில் துச்சமாமென்பதிற்றடையென்னை?

அன்றியும் அம்மந்திரத்தின்குறிப்பில் சைவன் முதலானவர்கள் மித்தியா ஞானிகளென்றனர். அதர்வசிகையால் "தியேயர்" என்று கொண்டாடப்படுகிற மூர்த்தியை உபாசிக்கிறவர்கள் மித்தையா ஞானிகளோ? அல்லது "தியாதா"வென நாராயணோபநிஷத்துத் தீர்மானித்தமூர்த்தியை உபாசிக்கிறவர்கள் மித்தையா ஞானிகளோ? என வேதவித்துகளே தீர்வுசெய்யக்கடவர்.

௧௨ அறிஞானவன் அத்தியான்மயோக * வாயிலாகக் காண்டற்கரியவரும், மறைவினரும், கூடப் பிரவேசித்தவரும், குகைக்குள் மறைந்தவரும், குகைக்கண் ணமர்ந்தவரும், பழையருமாகிய தேவனை அறிந்தின்ப துன்பத்தினின்று விடுகிறுகின்றனன்.

௧௩ மரண தருமத்தையுடைய மனிதன் ஆன்ம சொரூபத்தைக் கேட்டு நன்றாகக் கிரகித்து, கர்மத்தால் நேர்ந்த சரீரத்தை வேறாக்கி, சூட்சுமமான பரமாத்மாவை அடைந்து அவன்தன் பிரீதிக்கு விஷயமானதை யடைந்து ஆனந்திக்கிறான். நசிகேதசுக்குப் பிரமமாகியவீடு திறக்கப்பட்ட வாசற்படியுள்ளதாக நினைக்கிறேன்.

௧௪ (யமனே!) தர்மத்திற்கு வேறுபட்டதும், அதர்மத்துக்கு வேறுபட்டதும், காரணகாரிய மில்லாததும், இறப்பெதிர் விலாததுமாயுள்ள எதை நீர் பார்க்கின்றீரோ அதை யெனக்குச் சொல்லுக.

௧௫ (நசிகேதசே) சர்வவேதங்களும் எந்தச் சொரூபத்தைப் பிரதிபாதிக்கின்றனவோ, சகல கர்மங்களும் எதைச் சொல்லுகின்றனவோ, எதை விரும்புகிறவர்கள் பிரமசரியத்தை யனுஷ்டிக்கிறார்களோ, அந்தச் சொரூபத்தை உனக்குச் சொல்லுகிறேன் இது ஓம். †

௧௬ ஆகையா லிந்த வட்சரமே சிரேஷ்டம் விந்த அட்சரமே பிரமம், இந்த வட்சரத்தை யறிந்து எவனெதை யிச்சிக்கிறானோ அவனுக் கதுண்டாகிறது.

---

* அத்தியாத்மயோகம் என்பது உபநிடங்களில் பாசுபதவிரதம் சிரோவிரதம் விரஜாதீட்சை எனவும், சிவாகமங்களில் மந்திரசமஸ்காரதீட்சை எனவும் சொல்லப்படும். இராமருக்குத் தண்டகாரணியத்தில் அகஸ்திய மகாமுனிவர் இந்தத்தீட்சையைச் செய்துவைத்ததாகப் பதுமபுராணசிவகீதையிற் காணப்படுகிறது. "இதோஹிதேவகீ சூநுமுகமந்யுரதீக்ஷயத்" (உபமந்நியுமுநிவர் தேவகிநந்தனராகிய கிருஷ்ணர்க்குப் பாசுபததீட்சை செய்தனர்) எனப்பாரதத்திற் பெறப்படுகிறது. ஆகவே பரமாத்வையடைய இச்சையுள்ளார் எவரும் சிவதீட்சையடைய வேண்டுமென்பதாயிற்று.

† ஈண்டு "ஓம்" என்பது சிவபெருமானையேயாம். ஸ்ரீருத்திரம் "ஓம்நம: சிவாய" எனவும், தியாநபிந்து "த்யாயே தோங்காரமீச்வரம்" எனவும், நிருஸிம்ஹமோத்தரதாபிநி "ஓங்காரம் ஸர்வேச்வரம்" எனவும், அதர்வசிகை "ஓங்காரோவேதபரஈசோவாசிவ ஏக்த்யேயா" எனவும், சரபம் "ஓம்மஹாக்ராய மகாதேவாயசூலினே" எனவும், பஸ்மோஜாபாலம் "ஓங்காரஸ்வரூபிணம் மகாதேவம்" எனவும், தைத்ரீயாருணசாகை நாராயணம் "சிவோமே அஸ்து

கஎ இந்த வட்சரமே சிரேஷ்டமான சாதனமானது இந்தட்சரமே பிரம்மபிராப்திக்குச் சாதனமானது, பரமாயுள்ளது, இத்தகைய சாதனத்தைத் தெரிந்துகொண்டு பிரமலோகத்தில் பூஜ்ஜியனாகிறான்.

கஅ சகலத்தையு மறியுந் தன்மையுடைய விவன் ஜனனமரணங்க ளற்றவன், முந்தியு முற்பத்தியில்லாதவன், நித்ய சாசுவதன், பழமையானவன், (இவன்) தேகம் கொல்லப்பட்டாலும் ஆத்மா கொல்லப்படுகிறதில்லை.

கசூ (இவனைக்) கொல்லுகிறவன் கொல்ல நினைத்தானாகிலும், கொல்லப் பட்டவன் கொல்லப்பட்டதாக நினைத்தானாகிலும் அவ்விருவர்களும் (உண்மை) யறிந்தவர்களல்ல, இவன் (எப்போதும்) கொல்லப்படுகிறவனல்ல.

உ0 (பரம) ஆத்மா சூட்சுமத்தைவிடச் சூட்சுமமானது, ஸ்தூலமானதைவிட ஸ்தூலமானது, இந்த ஜீவனின் இருதயகுகையில் வைக்கப்பட் டிருக்கிறது, ஆசையற்றவன் கரணங்களின் சாந்தியால் (பரம) ஆத்மாவின் மகிமையைப் பார்க்கிறான், சோகமற்றவனாகிறான்.

---

ஸதாசிவோம்" எனவும் சுருதிகளனைத்தும் சுடர்விட்டொளிர்தளால் விளங்கும். அன்றியும் சிவபெருமானது சக்தியாரது திருநாமம் "உமா" அ×உ×ம் எனநிற்கற்பாலது வர்ணவியத்தியமாகிய எழுத்துமாறலான் உ×ம்×அ என நின்று "உமா" எனவாகிப் பிரணவமாக விளங்கும், அவரது திருக்குமாரர்களில்விநாயகக்கடவுளது கஜாநநக்காட்சியால் பிரணவஸ்வரூபம் இனிதுபெறப்படும், இனிஸ்கந்த மூர்த்தியை "ஸுப்ரஹ்மண்யோம் - ஸுப்ரஹ்மண்யோம்- ஸுப்ரஹ்மண்யோம்" என்று மூக்காற்கூறிச் சுருதி இசைப்பாறும், இனிக்காசியிலிறக்கிறவர்கட்குச் சிவபெருமான் தாரகோபதேசஞ் செய்கிறார் எனவும், அது ஓங்காரமாகிய பிரணவமெனவும் அதர்வசிரசும். ஜாபாலமும் முறையே "ஆத்மஜ்ஜோதிஸ்ஸக்ருதாவர்த்த ஏவ" என்னும் வசனத்தாலும், "அந்த்ரஹிஜந்தோர்முமூர்ஷோ"என்னும் வசனத்தாலும் நன்குபரிஷ்கரித்திருக்கின்றன. அவ்வுபதேசம்பெற்ற உயிர்கள் சிவரூபத்தை யடைகிறார்கள் என்பது சுருதி நிச்சயமாகையால் தாரகப்பிரணவமாகிய "ஓம்" சிவவாசகமெனல் சத்தியமாயிற்று. "ஓம்"என்பது நாராயணனைக் குறித்திடாதோவெனின் குறித்திடாது. என்னை யெனின்? நிருஸிஹ்மோத்ரதாபிநி "அகாரம்ப்ரஹ்மாணம்" "உகாரம் விஷ்ணும்" "மகாரம்ருத்ரம்" "ஓங்காரஸர்வேச்வரம்" எனலால் உகாரவாச்சியன் ஓங்காரவாச்சியனாதல் துஸ்ஸாத்தியமாம்.

உக சலிக்காமலிருந்து வெகுதூரத்திற்குப் போகிறது, படுத்துக் கொண்டு எங்கும் போகிறது சுகதுக்கங்களின் நடுவிலிருக்கும் அந்தத் தெய்வத்தை, என்னைக் காட்டிலும் வேறான எவனறிய யோக்கியனாவான்.

உஉ (கர்ம) சரீரமில்லாததாயும், ஸ்திரமில்லாத சரீரங்களில் இருப்பதாயும், * சர்வவியாபகமாயுமுள்ள (பரம) ஆத்மாவைத் தெரிந்து கொண்டு புத்திமான் துக்கப்படுகிறதில்லை.

உரு இந்த (பரம) ஆத்மா வெகுவேதங்களைப் படிப்பதினால் அடையத் தகுந்ததல்ல, சொந்தபுத்தியா லடையத்தகுந்ததல்ல, விசேஷ சாஸ்திர சிரவணத்தால் அடையத்தகுந்ததல்ல, எவனை யிவர் விரும்புகின்றாரோ அவனாலவர் அடையப்படுகின்றனர்.

உச கெட்டநடவடிக்கை யுள்ளவன், (பரம) ஆத்மாவை யடையமாட்டான், இந்திரியாதிகளை யடக்காதவன் அடையமாட்டான், பலவிஷய வியாபார முடையவன் அடையமாட்டான், மனதை நிக்ரகஞ் செய்யாதவன் அடையமாட்டான் (பசுபாச) உபாசனையாலு மடையமாட்டான்.

உரு எந்தப் பரமாத்மாவிற் பிராமணனும் க்ஷத்திரியனும் (அதாவது ஸ்தாவரஜங்கமான சகலஜகத்தும்) அன்னமாவதோ (அழிக்கக் கூடுமோ) எந்தப் பரமாத்வாவிற்கு மிருத்தியு † வியஞ்சனமோ (நாசமாக்கக் கூடுமோ) அந்தப் பரமாத்மா எங்ஙன மிருக்கிறதோ அது இத்தகைய தென்று எவனறிவான்.

மணவழகு.

---

* பரமாத்மா சகலத்திலும் அந்தர்யாமியாயிருப்பதால் ஜீவன்விஷயமாய் அவருக்குப் போக்குவருத்து கூறியது ஔபசாரிகமாம்.

† பல்லாயிரங்கோடி காலர்களையுண்டேப்பமிடும் காலகாலராம் பரமாத்மாவாகிய உருத்திரருக்கு மிருத்யுவியஞ்சனமாக விருக்கவும், அத்தகைய உருத்திரரை அபூஜ்யராக்கக்கருதி சாமான்ய மிருத்யுவை உருத்திரனெனக்கூறிய மத்துவர்வியாக்கியானம் "ஸர்வேதேவா:" "அஹமேவபசூநாமதிபதி:" எனும் வேதவாக்கியங்கட்கு மாறுபட்டு அபூஜ்யமா யொதுங்கிய தென்க.

உ

சிவமயம்

# "நான் யார்"?

தொகுதி-4 பக்கம்-13.

அதன்பின் கண்ணிந்திரியம் நீங்கிப்போய் ஒருவருடங் கழித்து வந்துஎன்னை யன்றி நீங்கள் எவ்வாறு பிழைத்தீர்களெனக்குருடர்கள் எவ்வாறு பிழைப்பார்களோ, அவ்வாது ஜீவித்தோமென்றனர். அது கேட்டு அவ்விந்திரிய முடலிற் போந்தது, பின் சுரோத்திரேந்திரியம் மனம்குறி இவைகளு முறையே நீங்கி மீண்டுவரச்செவிடர்அறிவீனர் நபுஞ்சகர் ஜீவித்தாங்கு ஜீவித்தோமென அவைகளும் உடலினைப் பொருந்தி நின்றன. அதன் பின் சிந்துதேசத்தில் மகிமையும் பெருமையும் வாய்ந்த குதிரை தன்னுடைய குளம்புகளைத் தூக்கி நின்று பாய்வதுபோல மேற்கூறிய கருவிகளை யெல்லாவற்றையும் ஓரசைப் பசைத்து பிராணவாயு வெளியிற் செல்ல நின்றபோது மற்றைய கருவிகளெல்லாங்கூடி "ஓமாட்சிமை பொருந்தியவரே" நீர் பிரிந்துபோக வேண்டாம் உம்மை யன்றியில் நாங்கள் எவ்வாறு உய்வோம் என்றனர். அது, நான் அத்தனை பெருமை யுடையவனாகில் எனக்குக் கீழ்ப் படியுங்களென்றது, எல்லாரும் அப்படியே ஆகட்டுமென்று வணங்கி நின்றனர்.

இத்தகைய பெருமை வாய்ந்த அப்பிராணவாயு உறக்கத்தில் கூடிப் பொருந்திக் கலந்து நின்றுயிர்க்கும்போது பாம்பொன்று முகத்திலேறிப்போக ஒன்று மறியாமலிருப்பதேன். போக்குவரத்துள்ள பிராணவாயு கரணங்களுக்கு நாயகமாய் நிற்கில், இராசன் பவனி போம்போது பரிவாரங்களும் உடன் செல்லுமாபோல், பரிவாரம் போன்ற கரணங்கள் தொழிற்படாது அடங்குவானேன். ஆகையால் பிராணவாயு முதலியுமல்லகரணங்கள் அதன்வழித்து மல்ல.இதுபற்றி பிராணவாயு நானென நிற்பது கூடாதாம். பிராணவாயு நான் அல்லவென உணர்ந்தபின் வேறொன்றுந் தெரியாது நின்ற விடமே சுத்த தத்துவ தூடணம்.

பஞ்சபூதப் பழிப்புமுதல் சுத்ததத்துவ தூடணம் வரை ஐந்து பிரகாரமாக ஆறுறு தத்துவங்களு நீத்தமை யுணர்க. அன்றியும், பிருதுவி தத்துவ முதல்நாத மீறுன முப்பத்தாறு தத்துவங்களைத் தனக்கு வேருகக் காண்பது.—தத்துவரூபம்.

அவைகள் தன்னு லறியப்பட்ட சடபதார்த்தங்க ளென்று தன்னறிவில் விளங்கக் காண்பது—தத்துவ தரிசனம்.

அவ்வாறு கண்டு நீங்கித்தான் அன்னியனுய் நிறைவாய் நித்தியமாய் அறிவாயுள்ள தன்மையை யறிந்து நிற்பது—தத்துவசுத்தி எனவறிக.

மண்முதலா நாதாந்த மாய்வந்த தத்துவத்தி
னுண்மை யறிந்தெல்லா மொழிந்தாயே—எண்ணிலிவை
தத்துவா தீதமெனச் சாற்றுங்காண் சைவமறை
யத்துவா வெல்லா மற.

மேற் கூறியாங்கு 36 தத்துவங்களையும் நீத்தபின் ஆணவத்தின் மேலீடு விஞ்சிவரும் அது கேவலமாம், சண்டு ஆன்மாவோடு சகசமாய் நின்ற ஆணவம் ஒன்றி நிற்க அதில் ஆன்மா பதிந்து இருளின் கண் விழித்த விழிபோல நிற்கும் எல்லாக் கருவிகளுங் கழன்றபின்னும் இவ்வாணவம் கழலாமல் நின்ற தன்மை என்னேவெனில்,—இருடான்,

விடிகைக் கிருண்ட மிருதிபோன் மாக
மடிகைக் கிருண்டதுகாண் மற்று.

இவ்வாணவத்திற்கு விகற்ப முதலான எண்குணமும் அதனையடுத்து வருங் கன்மத்துக்கு இருத்தல் முதலான ஆறுகுணமும் அதனை யடுத்து வரும் மாயைக்கு அஞ்ஞான முதலிய ஏழுகுணமும் உள்ளனவாம்; யாவும் ஆணவ சம்பந்தமாயே யிருக்கும்.

இவ்வாணவம் சிவஞானம் விஞ்சினுரை விட்டு நீங்கும் சத்தியையுடையதாய் இருளினு மிருண்டிருப்பதாய் அறிவை மயக்குவதாய் இத்தன்மைய தென்று ஒருவராலுங் காணமுடியாததாய் ஆன்மாவின்குணம் போலிருக்கும் அஃது இன்றளவும் (36 தத்துவங்கள் நீங்கியவழியும்) நிற்பது பொருந்துமோ என்று அறிவது கேவலதரிசனம்

இதுவோ மலம் என்று பார்த்தால் கேவலாதீதம் இருளாகிய இவ்வாணவமலத்தை இருள் என்று அறிந்ததினுல் இருளைப் பிரிந்து நின்ற நிலைபெற்றும். அவ்வறியாமை முன்போலே மறைத்து நின்றால் அவ்விருளாகிய ஆணவத்தை நீ காணமுடியாது பெத்த நிலையிலிருந்தது போலிருத்தல் கூடும்.

அந்த மலமா மறியாமை கண்டாயே
யந்த வறிவுநீ யையனே—தொந்தவிருள்
போனதே யுன்னை விடப் போக்கித் திரோதையரு
ளானதே கண்டா யறி.

மலநீங்கித் தானறியு முறைமையும், தன்னறிவிற் கறிவாய்நிற்கு மிறைவனது ஞானம் உபகரிக்கு முறைமையும் தன்னறிவிலே விளங்கக் காண்பது. ஆன்மபேதம் கண்ணிலிருள் போனுல் கண்தன்னைக் காணுதவாறுபோல ஆன்மாவை யறியவொண்ணுதோ வெனில், நீகண் போற் சடமல்லை, நீ காட்டியதைக் கண்டுணர்ந்த வொண் போதமாக உணர்க.

நான் கருத்தாவல்லனோ வெனில், உனக்கு அயர்ச்சி யுண்டாகி நின்ற தன்மையாலும், கருவிகள் உனக்கு வசப்பட்டு நில்லாததாலும், புண்ணியபாவம் உன்னைவந்து பொருந்தி நீ இன்பதுன்பங்களை யநுபவிப்பதாலும் உன்னையுங் கன்மத்தையுங் கூட்டிவிப்பதற்கு ஒருவன்வேண்டிய திருப்பதினுலும், உள்ளும் புறம்புநின்று கருவிகரணங்களை வினைக்கீடாக நடத்துதற்கு ஒருபொருள் வேண்டப்படுதலாலும், நீ கருத்தாவன்று. உன்னை உன்னுலறிய முடியவில்லை, அறிவித்தா லறிகின்றனை, ஆகையால் உனக்கு அறிவித்தற்கு வேறொருவன் வேண்டும்அவனே கருத்தாவாம், ஆகையால்நீ "தற்பரமுமில்லை." இநுகாறுங் கூறியவாற்றுல் தர்ப்பணம்போற் காட்டுருசார்மாயையில்லை; தற்பரமுமல்லை என்பது பெற்றும். பின்னை நான்யாரெனில்,

1. இரண்டு மிலாத் தனியன்
2. பாசவறிவும் பதியறிவுமின்றியே, யாசறவேநின்ற வனீயாம்
3. "நீசத்தசத்தன்று நேரேசதசத்தன்" என்பன விடைகளாக வறிந்து கொள்க.

இதுகாறுங் கூறியவைகளையும் மேலுள்ள நிலைகளையுமடக்கி

வான்கெட்டு மாருதமாய்ந் தழனீர் மண்கெடினுந்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்
கூன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட் டெனுள்ளமும்போய்
நான்கெட் டவாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

என திருவாசகங் கூறுவதை யறிந்துகொள்க.

ஆன்மா தனியனென்பதற்கும் சநசத்தனென்பதற்கும்

மேற்கோள்

## திருவாசகம்.

சிந்தனைநின் றனக்காக்கி நாயினேன்றன்
கண்ணிணைநின் றிருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கிவாக்குன்
மணிவார்த்தைக் காக்கியையும் புலன்களார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்தவிச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையேயுன்னைத்
தந்தனைசெந் தாமரைக் காடனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனியனேற்கே.

S. பால்வண்ண முதலியார்
திருநெல்வேலி.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# உன்னையறி உன்முடிவினை சிந்தைசெய்.

ஈண்டுத்தமியேன் எடுத்துக்கொண்ட விஷயமானது "உன்னையறி உன்முடிவினை சிந்தைசெய்" என்பதாம் "உன்னையறி உன்முடிவினை சிந்தைசெய்" என்னும் இது பாரமார்த்திக உணர்ச்சியென்பது ஒரு சிறிது மின்றி லௌகீகா வனுபவத்தில் ஈடுபட்டுள்ள தமியேன்போன்ற சாமானிய அறிவினையுடைய ஒருவனைக் குறித்து ஓர் ஞானாசாரியர்கூறிய உபதேசமொழிகள் போலும். இது "உன்னையறி உன்முடிவினை சிந்தைசெய்" என இரண்டுதொடர்களால் ஆயது. இவற்றுள் முன்னையதாகிய "உன்னையறி" என்பதனை முதற்கண் எடுத்துப் பேசி, அதன் பின் இரண்டாவ தனைக்குறித்து ஆராயத்துணிகின்றேன்.

உன்னையறி என்றதினால் உனக்கு வேறாய் உள்ள பிரபஞ்சப் பொருள் நீயல்ல என்பதும், பிரபஞ்சப் பொருள்களை எதிரிட்டு அறிபவன் நீ என்பதும் பெறப்படும், அஃதாவது பிரபஞ்சம் வேறு தான் வேறு என்னும் பகுத்தறிவு இன்றி பிரபஞ்சமேதானாய் விடயபோகங்களுள் அழுந்தி யிருப்பவனுக்கு தற் சொரூபத்தை அறிவித்து உண்மை நிலையைக்காட்டுதற் பொருட்டே இவ்வுபதேச வாக்கியம் எழுந்த தாதலின், அறியப்படுவது பிரபஞ்சம் எனவும் அறிவது பிரபஞ்சத்திற்கு வேறாய் உள்ள மற்றொரு பொருள் எனவும் பெறப்படலாயிற்று.

பிரபஞ்சத்திற்கு வேறாய் உள்ளமற்றொரு பொருள்யாது என்று ஆராயுங்கால் அதுவே நீ என ஆம். அந்த நீதான் எது? சூனியமா, தேகமா, இந்திரியமா, அந்தக் கரணமா, சூக்குமமா, பிராணனா, விஞ்ஞானமா, சமூகமா இவற்றுள் வேறாய தொன்றா என ஆசங்கை நிகழும், இவற்றுள் சூனியமே நீ என்னுங்கால் சூனியம் என்பது ஒன்றுமில்லாத பாழ் எனப்பொருள்படும். ஒன்று மில்லாத பாழ் ஆகிய சூனியம் ஒருபொருள் ஆகாது. ஆனால் சூனிய ஆன்ம வாதிகள் சூனி

யமே ஆன்மா அல்லது நீ என்கிறார்கள். அவர்கள் அங்ஙனம் கூறு வது தேகம், இந்திரியம், கரணம் முதலியவற்றை இது ஆன்மாவல்ல இதுஆன்மாவல்ல என முறையே ஒவ்வொன்றாகக் கழித்து நோக்குங் கால் அத்தேகேந்திரியங்களுக்கு வேறாக ஒரு பொருள் தமக்குக் காண ப்படாமையினாலேயாம். அஃது எதுபோலும் எனில் ஓர் ஆற்றைக் கடந்து சென்றபத்துமனிதர்கள் தமது தொகையில் சந்தேக முற்றுத் தனித்தனியே ஒவ்வொருவரும் எண்ணுந் தம்மைநீக்கி எதிர் நிற்கும் ஒன்பதுபேரையுமேகணக்கிட்டு ஒருவனைக்காண்கிலம் எனப் பிரலாபி த்துநிற்றலை ஒப்பதாகும்,எனவே ஒன்பது பேர்களையும் எதிர்நிறுத்தி எண்ணுபவனாகிய ஒருபுருடன் பத்தாவது மனிதனாயிருத்தல்போல, சரீரஇந்திரிய கரணங்களை இது ஆன்மாவல்ல இது ஆன்மாவல்லஎன முறையே ஒவ்வொன்றாகக் கழித்து அறிந்து கொள்ளுகின்ற அறிவா கிய பொருள் எதுவோ அதுவே பிரபஞ்சத்துக்கு வேறு பொருளா கிய ஆன்மாஎன்பது பெற்றாம்.

இனி தேகமே ஆன்மா என்னுங்கால் தேகத்தை நான்தேகம், நான்கால், நான்கை, நான்கண் எனத்தற்கிழமைப் பொருள்பட வழங் கல் வேண்டும். அங்ஙனமின்றி எனதுதேகம் எனதுகால் எனதுகை எனதுகண் எனப் பிறிதின்கிழமைப் பொருள்பட வழங்குதலானும், உயிர்நீங்கிய தேகத்தினிடத்து யாதொரு நிகழ்ச்சியும் காண்கிலோம் ஆகலானும் தேகம் ஆன்மா அல்ல என்பது நிச்சயிக்கப்படுகிறது.

இனி இந்திரியமே ஆன்மா என்னுங்கால் இந்திரிய மென்பது ஒன்றாயிராமல் மெய், வாய், கண், மூக்குச் செவிஎன ஐவேறு வகைப் பட்டு இருத்தலானும், ஓர் இந்திரியம் அறிகின்ற விடயத்தை மற் றொரு இந்திரியம் அறியமாட்டாது ஆகையானும், ஓர் இந்திரியம் தனது விஷயத்தை அனுபவிக்கும்போது மற்ற இந்திரியங்கள் அறி வின்றிக் கிடத்தலானும்,அவைகள் யாவும் தத்தம் இயல்பினைத் தெரி ந்துகொள்ள மாட்டா வாகையானும் இந்திரியம் தான் அல்லஎன்பது துணியப்படும்.

இனி அந்தக்கரணங்களே ஆன்மா என்னுங்கால், அவ்வந்தக் கர ணங்களும் ஒன்றாயிராமல் மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என நான்குவேறு பட்டிருத்தலானும், அவை ஒவ்வொன்றும் தனித்தனி வேறு வேறு தொழில்களைச் செய்வதல்லாது ஒன்றின் தொழிலை மற்

ருென்று செய்யமாட்டாது ஆகலானும், அவைதாம் நினைத்தல் சிந்தித்தல் முதலிய தொழில்களைச் செய்தும் நான் நினைத்தேன், சிந்தித்தேன் நிச்சயித்தேன் எனத்தத்தம் தொழிலை தாமேதெரிந்து கொள்ளமாட்டாவாதலானும் அவ்வந்தக் கரணங்களும் ஆன்மாஅல்ல என்பது பெறப்படும்.

இனிப் பஞ்சேந்திரியங்களும் தேகமும் செயலின்றிக் கிடக்கும் கனவின்கண்ணே சூக்குமதேகத்திற்கு அநுபவம் காணப்படுதலால் அச்சூக்கும தேகமேதான் ஆன்மா என்னுமிடத்துச் சொப்பனத்தின்கண் நிகழும் அநுபவத்தைச் சாக்கிராவஸ்தையின்கண் மறைந்து போகாது உள்ளபடியே அறிதல் வேண்டும். அவ்வாறின்றிச் சொற்பனத்தில அநுபவித்தது ஒன்றினைச் சாக்கிரத்தின்கண் உள்ளபடியே அறியாது மயங்கி அறிதலானும், யான் சொப்பனங்கண்டேன் கண்டிலேன் எனச் சாக்கிராவஸ்தையின்கண் மயங்கி அறியுந் தன்மைத்தாகிய ஓர்பொருள் அச்சூக்கும தேகத்திற்கு வேருக அறியக்கிடக்கின்றமையாலும் அச்சூக்கும தேகம் ஆன்மா அல்ல என்பது நன்கு விளங்கும்.

இனிப் பிராணவாயுவே தான் ஆன்மா என்னுமிடத்து ஏனைய கருவிகளெல்லாம் ஒடுங்கப்பெற்ற சுழுத்தி, துரியா அவஸ்தைகளின்கண் பிராணவாயு இயங்கி நிற்பவும் ஆண்டுச் சொப்பனவஸ்தையிற்போல இன்பதுன்ப நுகர்ச்சிகளாகிய உண்டிவினைகள் நிகழக்காணப்படாமையாலும் துயில் நீங்கிய வழி நன்ருகத் தூங்கினேன் என்னும் உணர்ச்சி அப்பிராணவாயுக்கு வேருகநிகழக் காண்கின்றனம், ஆகையானும் அப்பிராணனும் ஆன்மா அல்லஎன்பது வெளியாகிறது.

இனி விஞ்ஞான மென்னும் பிரம்மமேதான் ஆன்மா எனின் துரியாதீத அவத்தையின்கண் சிறிதும் அறிவின்றிக் கிடந்து பின்பு கலை முதலிய கருவிகளோடு சேர்ந்தவழியே விஷயத்தைக் கிரமக்கிரமமாக ஒன்றென்ருக அறிந்து வருவதல்லது எஞ்ஞான்றும் ஒரே பெற்றித்தாய் மறதியின்றி அறியும் தன்மைஅறிவுக்குஇல்லையென்பதுகண்கூடாம் ஆதலின் அப்பிரமும் ஆன்மா அன்று என்பது பெறப்படும்.

இனி, தேகேந்திரிய கரணங்கள் முதலிய எல்லாம்கூடிய சமுதாயமே அல்லது சமூகமே ஆன்மா என்னுமிடத்து, தேகேந்திரிய கரணங்கள் செயல் இல்லாத மாயாகாரிய ஜடப்பொருளா யிருத்தலா

னும் அவற்றிற்குத் தனித்தனி வெவ்வேறுபெயர்கள் இருத்தலானும் அச்சமுதாயமும் ஆன்மா அன்று என்பது பெறப்படும்.

ஆகவே இத்தேகம் இந்திரியம் அந்தக்கரணம், சூக்குமம், பிராணன், விஞ்ஞானம், சமூகம் என்பனவற்றிற்கு வேறாய் இருந்து அத்தேகேந்திரிய கரணாதிகளைத் தொழிற்படுத்தி இன்பதுன்ப அனுபவங்களை அறிகின்ற அறிவாகிய ஓர்பொருள் இச்சரீரத்தின்கண் உளது எனவும் அதுவேதான் ஆன்மா எனவும் தெள்ளிது புலப்படும்.

இதுகாறும் முதலாவதாகிய உன்னையறிஎன்னும் வாக்கியத்தைக் குறித்து ஒருவாறு சுருக்கமாய் ஆராயப்பட்டது. இனி இரண்டாவதாகிய உன்முடிவினை சிந்தைசெய் என்பதைக்குறித்தும் சுருக்கமாக சில வசனங்கள் கூறி முடிக்கின்றேன்.

உன்முடிவினை சிந்தைசெய்என்பது உனது முடிவாகிய செயலை அதாவது உனது முக்கியமான உண்மைச் செயலை ஆராய்வாய் எனப் பொருள்படும்.உன்முடிவினை சிந்தைசெய் என்னும் வாக்கிய ஆராய்ச்சியினால் தான் எனச் சொல்லப்படும் ஆன்மாவாகிய நீ இச்சரீரத்தின் கண்ணேயே இருப்பதாகச் சிந்திக்கின்றமையால் அப்பெற்றிய ஆன்மாவாகிய நினக்கு இச்சரீரம் எக்காலத்து எதன்பொருட்டுக்கிடைத்தது எனவும் இச்சரீரம் உண்டாவதற்கு மூல காரணம் யாது எனவும், இச்சரீரம் யாரால் கொடுகப்பட்டது எனவும், இன்னோரன்ன விசாரங்கள் தாமே நிகழும்.

இவற்றை யாராயுங்கால் இதுஎக்காலத்துக் கிடைத்ததுஎன்பது அளவைகளான்அறிந்துகொள்ளுதற்கு இயலாதாம்ஆயினும்நமது சித்தாந்தநூல்களின்படி பிரதமமஃகாசிருஷ்டி ஆரம்பகாலத்திலேயே இச்சரீரம் ஆன்மாவுக்குப் பரமேசுரனால் கொடுக்கப்பட்டது என அறியலாம். இச்சரீரம் எதன்பொருட்டுப்பரமேசுரனால் கொடுக்கப்பட்டது, எனஆராயப்புகின் ஆன்மா இடையீடுஇன்றி பற்றியிருக்கும் ஆணவமல நீக்கத்தின் பொருட்டாகவே கொடுக்கப்பட்டது என்பது வெளியாம். இதனால் இச்சரீரத்தொடக்கு ஆன்மாவிற்கு ஏற்படுதற்குமுக்கியகாரணம் ஆணவமலமேயாம் என்பது வெளிப்படை. அஃதாவது குருடனாகிய ஓர் அந்தகனுக்கு உலகத்திற் சஞ்சரித்து உச்சீவித்தலின்பொருட்டுக் கண்ணுள்ளானொருவனிரங்கி ஓர்கோலைக்கொடுத்தல் போல அனாதிகேவல அந்தகாரத்தில் அறிவின்றி அழுந்திக்கிடக்கும்

ஆன்மாவுக்கு ஆணவமல நீக்கத்திற்கு ஏதுவாகிய கர்மானுபவத்தின் பொருட்டு முதற்கடவுளாகிய பரமேசுவரன் பெருங்கருணையினால் கொடுத்த ஓர் அரிய கருவியேஇச்சரீரமாம். ஆகவே ஆன்மாவிற்குக்கர்மத்தில் இச்சையுண்டாவதற்குக் காரணமும் ஆணவமலமேயாம் என்பதுபெறப்படும். எப்படியெனின் சிறிய குழந்தைக்குப்பால் உண்ண வேண்டுமென்று பாலின் கண்ணே இச்சையை யுண்டாக்கியது யார்? அக்குழந்தையின் அன்னையா? அல்லது பாலா? என ஆராயுங்கால் தாயே இச்சையை யுண்டாக்கினள் எனின் தாய்கொடுத்த நேரங்களி லெல்லாம் குழந்தை பாலைக்குடித்தல் வேண்டும். பாலே குழந்தைக்கு இச்சையை உண்டாக்கிற்று எனில் எவ்வளவு பாலைக்கொடுத்தாலும் குழந்தை குடித்தல் வேண்டும். அவ்விரண்டும் இன்மையால் குழந்தைக்குப் பாலிலே இச்சையைக் கொடுத்தது தாய்க்கும் பாலுக்கும் வேறுயுள்ள பசியாயினாற்போல, ஆன்மாவிற்கு கர்மத்திலே இச்சையைக் கொடுப்பது ஆணவமலமேயாம். ஆகவே குழந்தைக்குப் பசியுண்டாகியவழி அன்னையானவள் அப்பசியை அறிந்து பாலைப் பாலடையால் வார்த்துக் குழந்தைக்கு ஊட்டிப்பசியை மாற்றுதல் போல ஆணவமலச் சேர்க்கையினால் ஆன்மாவிற்கு கர்மத்தில் இச்சையுண்டாகியவழியே பெருங்கருணைக்கடலாகிய பரமேசுரன் அதனை அறிந்து அக்கர்மானுபவத்தின் பொருட்டு அவ்வான்மாவின் இச்சைக்கு ஏற்ற யாதாமொரு சரீரத்தைக் கொடுத்துக் கர்மங்களை யனுபவிக்கச் செய்து ஆணவமல உபாதியைப்போக்கி அவனுக்குப் பேரின்பத்தை அளிப்பவர் ஆகின்றார். அவ்வாறு ஆணவமல நீக்கமெய்திப் பேரின்பாவனுபவப் பேற்றை அடைத்தற் பொருட்டுச் சிவபெருமானால் ஆன்மாக்கட்கு அளிக்கப்படுவனவாகிய தேகங்கள் பலவற்றினுள்ளும் இம்மானுட யாக்கை ஒன்றே பலவாற்றானும் சிறந்த உயர்வுடைத்தேகமாம் என்பது யாவரும் செவ்வனே அறியக்கிடப்பதொன்றாம். "எண்ணரிய பிறவிதனின் மானுடப்பிறவிதான் யாதினும் அரிது அரிதுகாண்" எனப்பெரியோரும் கூறியுள்ளார். அத்தகைய இம்மானுடதேகமும் நீரிற்குமிழியைப் போல அநித்தியமாக இருத்தலால் இத்தேகம் உள்ளபோதே இதனால் உண்டாகக் கூடிய உண்மைப்பயனை நாம் அடையப்பெறுேமாயின் "இப்பிறவிதப்பினால் எப்பிறவிவாய்க்குமோ யாதுவருமோ" என்னும் ஆன்றோர் வாக்கின்படி மறுபடியும் இம்மானுடத்தேகமே நமக்கு கிடைக்குமென்பதும் இவ்வாறு

கிய அநுபவம் வரும் என்பதும் நிச்சயமின்றாம். ஆதலால் அத்துணைச்சிறப்புவாய்ந்தமானுடத்தேகத்தைப் பெற்றுள்ள ஆன்மாக்களாகிய நாம் ஒவ்வொருவரும் "நின்றன நின்றன நில்லா வெனவுணர்ந் தொன்றின வொன்றின வல்ல செயிற்செய்க சென்றன சென்றன வாணாள் செறுத்துடன் வந்தது வந்தது கூற்று"

என்னும் ஆன்றோர் கட்டுரையைக் கடைப்பிடித்து காலந்தாழ்க்காது இம்மானுடதேகமும் விவேகமும் நன்னிலமையி லிருக்கும்போதே நமது உண்மைச் சொரூபத்தினை யறிந்து நம் தலைவனாகிய சிவபெருமானை அடைதற்குப் பிரயத்தினப்பட வேண்டியதும் நம்மால் இவ்வுலகத்திலே செய்யப்படும் ஒவ்வோர் செயல்களையும் அவ்வுண்மைப்பேற்றி சித்தம் நற்செயல்களாகவே யறிந்து செய்ய வேண்டியதும் நமக்கு இன்றியமையாத உண்மைச்சாதனங்களாம். இக்கருத்தினாலன்றோ அருணந்திசிவமும் "மானுடயாக்கைதானும் வருத்தது மனவாக்காய•ஆனிடத்தைந்து மாடிமரன்பணிக் காகவன்றோ•வானிடத்தவரு மண்மேல்வந்தரன் றனைப் பூசிப்பர்•ஊனெடுத்துழலு மூமரொன்றையு முணராரந்தோ" என்று ஞானசித்தியிற் கூறியதும்என்க. இப்பொழுது நாம் சைவசித்தாந்த மகாசமாஜம் எனும் கழகத்தையேற்படுத்திச் சைவ நேயர்களாகிய யாவரும் ஒருங்கே சேர்ந்து இத்துணைப் பிரசங்கஞ்செய்வதும், நமது உண்மையை யறிந்து பரிசுத்தமாகிய ஓர் உறுதிப்பயனைப் பெறும்பொருட்டாகவே யல்லது வேறன்று. நாம் அருமையாகிய இம்மானுட தேகத்தைப் பெற்றிருந்தும் இதனால் அடையக்கூடிய ஆன்மலாபம் சிவபுண்ணியம் முதலிய உறுதிப்பயன்களை ஓர் அணுத்துணையேனும் அடையப்பெறேமாயின் இம்மானுடதேகமும் விவேகமும் நமது கல்வி யறிவும் நமது ஆராய்ச்சிகளும் நமது பிரசங்கமும் இச்சைவசித்தாந்த மகாசமாஜம் முதலிய கூட்டங்களும் மற்றைப் பிரயத்தனங்களும் ஆகிய இவை யெல்லாம் பிரயோஜன மற்றனவாய் முடியு மன்றே?

ஆதலால் எவ்வாற்றாலும் எவ்விதத்தினாலும் நன்மை யடைதற்கு ஏதுவாகிய உத்தம சன்மார்க்க உண்மைநெறிகளில் பயிலுதற்கு நாம் அவசியம் முயலுதல் வேண்டும் என்பதும் அங்ஙனம் முயலாது இம்மானுட தேகத்தைப் பாழாக்கி விடுவோமாயின் வேறு எக்காலத்திலும் எப்பிறவியிலும் நம்மையறிந்து கொள்ளுதற்குச் சாதனமாகிய

அவகாசம் நமக்குக் கிடைக்கமாட்டாதென்பதும் ஒருதலையாம். இக்கருத்துப் பற்றியே நமது திருநாவுக்கரசு ஸ்வாமிகளும் "துறக்கப்படாத உடலைத்துறந்து வெந்தூதுவரோடு இறப்பன், இறந்தால் மேல் விசம்பு ஏறுவன், ஏறிவந்து பிறப்பன் பிறந்தால் பிறையணிவார் சடைப்பிஞ்ஞகன்பேர் மறப்பன் கொலோ என்று என் உள்ளங்கிடந்து மறுகிடுமே"எனத் திருவாய்மலர்ந்தருளி யுள்ளார் இதுவே"உன்னையறி உன்முடிவினை சிந்தைசெய்" என்னும் வாக்கியங்களின் முடிந்த கருத்தாகும்.

இது காறும் கூறியவாற்றால் நீ என்பது தேகேந்திரிய கரணமுதலிய வற்றிற்கு வேறாய் உள்ள ஓர் சித்துப்பொருளாம் என்பதும், அதுவே தான் என்கின்ற ஆன்மா எனப்படும் என்பதும், அவ்வான்மாவே சரீரேந்திரிய கரணமுதலியவற்றைத் தொழிற்படுத்தி இன்ப துன்ப விடயங்களை அனுபவிக்கும் புருடனுவன் என்பதும், அப்புருடனுகிய ஆன்மாவிற்கு ஆணவமல நீக்கத்தின் பொருட்டு இறைவனால் கொடுக்கப்படும் தேகங்களெல்லா வற்றுள்ளும் இம்மானுடதேகமே மிகச்சிறந்ததாம் என்பதும் அதுவே இறைவனது அருட்சன்னிதியை யணுகிப் பேரானந்தப் பேற்றை யடைதற்கு இன்றியமையாத சாதனமாயுள்ளது என்பதும், இம்மானுடதேகம் நீர்க்குமிழியைப்போல அநித்தியமாம் என்பதும்,மறுபடியும் இத்தேகம் கிடைக்குமென்பது நிச்சயமில்லை யாதலால் இத்தேகம் உள்ளபோதே இதனால் அடையக் கூடிய பேரானந்தப்பேற்றைப் பெறுதற்கு முயலல் வேண்டும் என்பதும் அவ்வாறு முயலாதவழி இத்தேகேந்திரிய கரண முதலாயின எல்லாம் பிரயோஜன மின்றாய் முடியும் என்பதும் பிறவும் விளங்கும்படி ஒருவாறு சங்கிரமமாக விளக்கினேன்.

வா-தி-கோவிந்தராஜ முதலியார்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# "தாயுமானவர் கொள்கை"

இதனைத் தாயுமானவர் என்பவர் யார்? அவர் கொள்கையாது? என இரண்டு வகையாகப் பிரித்து ஆராயலாமாயினும் முன்னையது நூல்களில் தாயுமானவர் சரித்திர மென்னுந் தலைப்பேரால் எழுதப் பட்டிருக்கின்றமையால் அதனை விடுத்துப்பின்னையதாகிய அவர் கொள் கையையே இவ்விடத்தில் ஆராயத் துணிகின்றேன்.

கொள்கையைப்பற்றி நிச்சயிப்பதற்குப்பிறநூல்களில் தாயுமான வரைப் பற்றிக் கூறப்பட்டிருப்பின் அவையும், தாயுமானவருடைய திருவாக்காகிய பாடல்களுமே கருவியாகும். அவற்றுள் தாயுமானவ ரைப் பற்றிப் பிறநூல்களிற் கூறியிருப்பதாக எனக்குத் தோன்ற வில்லை. ஆதலால், அவருடைய பாடல்களையே ஆதாரமாகக் கொண்டு அவர் கொள்கை இன்னதென நிச்சயிக்க எண்ணுகின்றேன்.

இனி, கொள்கையென்பது கொள்ளுதல் என்னும் பொருளைக் குறிக்கும். இதனை ஈகை யென்பது ஈதலென வழங்குமாற்றானறிக. கொள்ளுதல் என்றதனால் எதனைக் கொள்ளுத லென்னும் ஐயம் நிக ழுமன்றே, அந்நிகழ்ச்சிபற்றிக் கொள்ளப்படும் பொருள் உண்டென் பது பெறப்படும். கொள்ளப்படும் பொருள் உலகப்பொருள் கடவுட் பொருளென இருதிறப்படும் அவற்றுள் உலகப்பொருள் என்றுங் கொ ள்ளப்படுவதின்றி ஒருகாலத்துக் கொள்ளுதற்கும் மற்றொருகாலத்து விடுதலுக்கும் உரியதாகும். கடவுட் பொருளோ அங்ஙனமின்றி என் றுங் கொள்ளத்தக்கதாகும். ஆகவே கொள்கை யென்பதற்குக் கட வுள் பொருளைப் பற்றிய கொள்கை என்பதே சிறந்த பொருளாம்.

இனி கடவுள் என்பது கடந்து நிற்றலையுடையது என்னும் பொருட்டாதலால், அது தன்னின் மேம்பட்ட சத்தியையுடையதெ னக் கொண்டு பாப புண்ணியமே தன்னின் மேம்பட்டதாம்; அதுவே தாயுமானவர் கருத்தாமென்று பரிபூரணானந்தம் என்னுந் தலைப்பின் கீழ் "கண்மூடி யொருகணமிருக்க வென்றாற் பாழ்த்த கன்மங்கள்

போராடுதே" என்பதை எடுத்துக் காட்டுவர் ஒருசிலர். அடுத்தவரியில் "பண்டையுள கன்மமே கர்த்தாவெனும் பெயர்ப்பட்ச நானிச்சிப்பனோ" என்பதனாலும், பிறிதோரிடத்தில் "கர்மமானது கோடி முன்னே செய்தாலு நின்கருணைப் பிரவாகவருளைத் தாகமாய் நாடினரை வாதிக்கவல்லதோ" என்பதனாலும் கன்மமே கருத்தாவென்பது தாயுமானவர் கருத்தன்று.

மற்றொருசாரார் "அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ......"என்பது முதலிய வாக்கியங்களை எடுத்துக்காட்டி விக்கிரக ஆராதனந் தாயுமானவருக் குடன்பாடன்று என்பர். ஆகாரபுவனம் எனனுந் தலைப்பின்கீழ் "ஆதியந்தமெனு மெழுவா யீறற்றோங்கி யருமறையின்னமுங் காணாகாற்ற..................சந்திரமௌலி தடக்கைக் கேற்க வேதக சின்மாத்ரமா யெமமனோர்க்கும் வெளியாகவந்த வொன்றே" என்பதனாலும், பிறிதோரிடத்தில் "மூர்த்தி தலந் தீர்த்த முறையாய்த் தொடங்கினர்க்கோர் வார்த்தை சொல்ல சற்குருவும் வாய்க்கும்" என்பதனாலும் அவர்கருத்துப் பொருந்தாது.

பிறிதொரு சாரார் சின்மயானந்தம் என்னுந் தலைப்பின்கீழ் "பேரின்பமான சுகவாரியினைவாய் மடுத்துத் தேக்கித்திளைக்க நீ முன்னிற்ப தென்றுகாண்" எனவும் பொன்னைமாதரை என்னுந் தலைப்பின் கீழ் "அங்கணா வுன்னடியிணை யன்றியே தங்க வேறிட முண்டோ" எனவும் கூறுவனவற்றை எடுத்துக் காட்டிக் கடவுள் உருவத்திருமேனி கொண்டிருக்கும் அந்த வுருவத்தை யடைதலே முத்தி என்பனவை தாயுமானவர் கொள்கையென்பர். ஆரணம் என்னுந் தலைப்பின் கீழ் "அடியெனு மதுவும் அருளெனு மதுவும் அறிந்திடில் நிற்குணநிறைவு, முடியெனு மதுவும் பொருளெனு மதுவும் மொழிந்திடிற் சுககனம்" என்பதனால் அவர்கருத்தும் பொருந்தாது.

வேறொருசாரார் பரிபூரணானந்தம் என்னுந் தலைப்பின்கீழ் "சந்ததமு மெனது செயனினது செயலியா னெனுந்தன்மை நினையன்றியில்லாத், தன்மையால் வேறலேன்" என்பதனால் தன்னைத்தவிரக் கடவுளில்லை, நான் பிரமம் என்பதே தாயுமானவர் கொள்கை என்பர். சிற்சுகோதய விலாசம் என்னுந் தலைப்பின்கீழ் "யாங்களே கடவுளென்றிடும் பாதகத்தவரும்" என்பதனால் அவர்கருத்தும் பொருந்தாது.

இனித் தாயுமானவர் கொள்கைதான் யாது? அதனை நிச்சயிப்ப தற்குரிய அவர் பாடல்யாது? எனின் கொள்கை நூல்வழியாகத் தான் கொண்டதும் ஞானாசிரியரின் உபதேச வழியாகத்தான் கொண்டது மாகும். அவ்விரண்டும் முரணுவாம். நூல்வழியாகக் கொண்டது ஆசிரியர் உபதேசத்திற்கு முரணுமாயின் பின்னர் உபதேசத்திற்கேற் றவாறு நூலினுற்கொண்ட கொள்கையை மாற்றிக் கொள்வதேமுறை மையாதலின் அதுபற்றி ஆசங்கை யொன்றுமில்லை. இதனுல் கொள் கைக்கு ஆசிரியர் உபதேசமே சிறந்தகாரண மென்றவாறுயிற்று. ஆத லால் தாயுமானவர் பாடல்களுள் ஆசிரிய வணக்கங்கூறும் பாடல்களே அவர் கொள்கையை நிச்சயிப்பதற்குச் சிறந்த கருவியாகுமெனஅறிக. தாயுமானவருக்கு ஆசிரியர் மௌனகுரு வென்பது சரித்திரவாயிலா யாவரும் அறிந்தவிஷயம். அவர் பாடலில் மௌனகுரு வணக்கமென 10 செய்யுள் சொல்லியிருக்கின்றூர். அப்பத்துச் செய்யுளுள்ளும் தன க்கு உபதேசித்த சாதனத்தையும் அதனுல் தாமடைந்த பயனையும் ஒரு செய்யுளில் கூறி ஏனைய செய்யுள்களில் ஆசிரியர் பெருமை முத லிய வற்றைக் கூறியிருக்கின்றூர். ஆதலால் அவ்வொரு செய்யுளையே அவர் கொள்கையை நிச்சயிப்பதற்கு ஆதாரமாக எடுத்துக் கொள் கின்றேன்.

அச் செய்யுள் வருமாறு:—

ஐந்துவகை யாகின்ற பூதமுத னுதமு
மடங்கவெளி யாகவெளிசெய்
தறியாமை யறிவாதி பிரிவாக வறிவார்க
ளறிவாக நின்ற நிலையில்
சிந்தையற நில்லென்று சும்மா விருத்திமேற்
சின்மயா னந்த வெள்ளம்
தேக்கித் திளைத்துநா னதுவா யிருக்கநீ
செய்சித்ர மிகநன் றுகாண்
எந்தைவட வாற்பரம குருவாழ்க வாழ்கவரு
ளியநந்தி மரபு வாழ்க
என்றடியர் மனமகிழ வேதாக மத்துணி
பிரண்டில்லை யொன்றென் னவே

வந்தகுரு வேவீறு சிவஞான சித்திநெறி
மௌனோப தேச குருவே
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌன குருவே.

இதன் பொழிப்புரை:—"என்றும் அடியார்கள் மனமகிழும்பொருட்டு வேதாகமங்களில் கூறப்படும் முடிபு இரண்டில்லை யொன்றே என அருளிச்செய்ய எழுந்தருளிவந்தகுருவே! சிவஞான சித்தியாரென்னும் நூலிற் கூறப்படும் முடிவான நெறியை மௌனத்தினால் அடியேனுக்கு உபதேசம் செய்தருளிய குருவே! மந்திரத்தில்வலிமைபெற்ற குருவே! யோகத்தைத் தந்திரமாக வுபதேசஞ் செய்தருளும் குருவே! திருமூலர் மரபில்வந்த மௌனகுருவே! ஐந்து வகையாகக் கூறப்படும் பிருதிவி முதலாக நாததத்துவ மீறாக அனைத்தும் நீங்கும்படியாக நீக்கி, தன்னையுந் தலைவனையும் அறியாதிருந்த அறியாமையினையும் உலகத்தை அறிந்துவந்த அறிவினையும் நீங்கும்படியாக அறிபவர்கள் நிற்கின்ற அறிவாகிய நிலையில் மனத்தின் செயலற்று நிற்பாயெனச் சும்மா விருக்கும்படி செய்து அவ்வாறிருத்தலினால் மேல் சின்மயானந்த வெள்ளம் பூரணமாகி அதனை அனுபவித்து அச்சின்மயானந்தமே நானாக விருக்கும்படி நீ செய்தவிநோதம் மிக நன்று; இவ்வாறு நீ உபதேசித்தருளுதற்கு முதற் குருவாய் வடவால் நீழற்கீழ் எழுந்தளியிருக்கும் எமது அத்தனாகிய பரமாசாரியர் வாழ்க, அவ்வாறு வாழும்வண்ணம் அப்பரமாசாரியரைத் துதித்தருளிய நந்திதேவர் திருமரபு வாழ்க" என்றவாறு.

என்றடியார் என்றது உம்மைத்தொகை; ஆதலால் என்றும் அடியார் என விரிக்கப்பட்டது. என்னவே என்பதிலுள்ள ஏகாரத்தை ஒன்று என்பதனுடன் கூட்டுக. ஆதலால் ஒன்றே என்று விரிக்கப்பட்டது. வீறு என்பதைச் சிவஞான சித்தி யென்பதன்பின் வைத்துரைக்க. ஆதலால் சிவஞான சித்தியாரிற் கூறப்படும் முடிவான நெறி என்று உரைசெய்யப் பட்டது. சித்தியாரில் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என்னும் நான்கு வகையான ஞான சாதனங் கூறப்பட்டுளது. அவற்றுள் தெளிதலுக்கும் நிட்டைக்கும் இடையீடின்மையானும் தெளிதலிலேயே பெரும்பாலும் சாதன முற்றுப் பெறுதலானும் தெளிதலால் உண்டாயதைச் சாதித்தலே நிட்டையாதலானும் முடிவான நெறி தெளிதலென அறிக.

இச் செய்யுளினுள்ள விசேடங்கள் வருமாறு:— உயிர்சார்ந்த
தன் வண்ணமாய் நிற்குந் தன்மையுடையதாதலால் பூதமுதல் நாதம்
வரையுள்ள தத்துவங்கள் நீங்குதற்குச் சிவோகம் பாவனையால் பேர
றிவாகிய சிவத்தைச் சார்ந்து நிற்கவேண்டுமென்பது தோன்ற அறி
வாக நின்றநிலையில் நில்லெனவும், அங்ஙனம் நிற்குங்கால் சுட்டிச்சுட்டி
யறிதலின்றி நிற்கவேண்டுமென்பது தோன்றச்சிந்தையற நில்லென
வும், அவ்வாறு நிற்கில் மேற்செய்ய வேண்டுவது ஒன்றுமில்லை என்
பது தோன்ற சும்மாயிருத்தி எனவும், இதுவரை சாதனமும் இனிக்
கூறப்படுவது பயனுமென்பது தோன்ற மேலெனவும், பதியைச் சார்
ந்த உயிருக்கு அப்பதியின் எண்குணங்களும் பொருந்துமென்பது
தோன்றச் சின்மயானந்த வெள்ளந்தேக்கி எனவும், எண்குணங்களுந்
தன்னிடத்துப் பொருந்திடினும் இறைவன்போலப் பஞ்சகிருத்தியஞ்
செய்தலின்றிச் சிவானுபவம் ஒன்றற்கே உரிமையுடையதென்பது
தோன்றத்திளைத்து எனவும், இவ்வாறு நிற்கின்றேமென்னும் போத
மிருப்பின் அவ்வனுபவம் நீங்கிவிடுமென்பது தோன்ற நானதுவாயெ
னவும், இந்நிலைவரைதான் ஆன்மாவென்ப தொன்றுண்டு, இந்த நிலை
வந்தால் ஆன்மா இல்லையென்று கூறுவாருமுளராதலால் முத்தியினும்
ஆன்மா உண்டென்பது தோன்ற இருக்கவெனவும், இவ்வனுபவம்
உண்டாகும் வண்ணம் மௌனமாயிருந்து காட்டினர் என்பது தோ
ன்றச் சித்தமிக நன்று எனவும், இந்நிலைவேதத்திற்கும் ஆகமத்திற்கும்
உடன்பாடென்பது தோன்ற வேதாகமத்துணி பிரண்டில்லை ஒன்றே
யெனவும், இவ்வுபதேசமுறை சிவஞான சித்தியாரில் உள்ளதென்பது
தோன்ற சிவஞான சித்திநெறி எனவும், முதற்குருவை வணங்கினால்
தன்குருவையும் வணங்கினதாகுமென்பது தோன்ற எந்தைவடவாற்
பரமகுருவாழ்க என்றும், இவ்வுபதேசமுறை இந்நில உலகத்தில் என்
னும் பிரகாசித்து யாவருமின்புறவேண்டுமென்பது தன்கருத்தென்
பது தோன்ற நந்திமரபுவாழ்க வென்றுங் கூறினார்.

இன்னும் பூதமுதனாதமு மென்றதனால் தத்துவரூபமும், வெளி
யாக என்றதனால் தத்துவ தரிசனமும், இவ்விரண்டுங் கூறியதனால்
இவ்விரண்டோடுடனிகழும் ஆன்மரூபமும், வெளிசெய்து என்றதனால்
தத்துவசுத்தியும், அறிவாக என்றதனால் தத்துவ சுத்தியோடுடனிக
ழும் ஆன்மதரிசனமும், சிவரூபமும், சும்மாவிருத்தி என்றதனால்

ஆன்ம சுத்தியும், சின்மயானந்த வெள்ளந் தேக்கித்திளைத்து என்றதனால் ஆன்மசுத்தியுடனிகழும் சிவதரிசனமும், நானது வாவென்றதனால் சிவயோகமும், இருக்க என்றதனால் சிவபோகமும் என்றிவ்வாறு தசகாரியமும் கூறினாரெனவும் அறிக.

இச்செய்யுளில் சும்மாவிருத்தி சின்மயானந்த வெள்ளந் தேக்கித்திளைத்து என்றது கொண்டு இவர்விக்கிர ஆராதனங்கூறும் மதத்தினரல்லரென விக்கிர ஆராதனஞ் செய்துகொண்டே செய்யவில்லை என்று கூறும் ஒரு சாரார்கூறுவர் அவ்வாறு கூறுவோருக்குப் பூதமுதலான தத்துவம் உடன்பாடின்மையாலும் பிறவிடங்களிற் கூறப்படும் பரசிவமுதலிய திருநாமங்கள் உடன்பாடின்மையாலும் அவர் கூற்றுப் பொருந்தாது.

இனி வேதாகமத் துணிபு இரண்டில்லை ஒன்றெனவே என்றது கொண்டு கடவுட்பொருள் ஒன்றுதான் உள்ளது ஏனையஉயிர், உலகம் என்னும் பொருள்கள் கிடையாவென்பதே இவர்கருத்தெனவும் இப்பொருளுக்கேற்பச் சிவஞான சித்திநெறி என்பதற்குச் சிவஞானத்தைச் சித்திக்கச்செய்யும் நெறிஎனக்கொள்ள வேண்டுமெனவும் ஒரு சாரார் கூறுவர். அவர் கருத்து முற்றுப்பெற வேண்டுமாயின் துணிபை ஆகு பெயரால் துணிபொருளுக் காக்கவேண்டும், அவ்வாறு ஆக்குங்காலும் பூதமுதலென்றதனால் பாசமும் நான் என்றதனால் பசுவும் உள்ளனவாக மேலேகூறியதனோடு முரணும், அன்றியும்ஒருபொருள் உண்டெனக் கூறுவார் மதத்தில் கலைமுதலிய வித்தியாதத்துவமும் நாதமுதலிய சிவதத்துவமுங் கிடையா வாதலின் அவர் கூற்றும் பொருந்தாது.

சிவஞான சித்திநெறி என்பதற்குச் சிவஞானத்தைச் சித்திக்கச் செய்யும் நெறி என்றல் பொருந்துமாயினும், வெளிசெய்தறிவாக சிந்தையறச் சும்மாவிருத்தி என்றதனால் நெறியினையும் செய்சித்ரம்என்றதனால் அந்நெறியை அருளினாரென்பதையும் மேலே கூறிவிட்டபடியால் மீளவுங்கூறுதல் மிகை. ஆதலால், அந்நெறி சிவஞான சித்தியாரென்னும் நூலிலே கூறப்பட்டு அத்திருவேட்டை இவருக்கு மௌனமாயிருந்து உபதேசஞ் செய்யுங்காலத்துத் திருக்கரத்துத் தாங்கியுள்ளாராதலால் பின்னர் அம்மெய்ந்நூலைப் பார்க்கும்பொழுது அதிலுள்ளதாய்க் காணப்பட்டு அந்நூற்பொருளை ஓதுவிக்கா துணர்த்தினாரென்பதைப் பாராட்டினார் என்றலே சிறப்பாம்.

அன்றியும் இவர் குரு மரபுவணக்கங் கூறுங்கால் கல்லாலரசை என்றது தொடங்கி நந்தி முதலிய அகச்சந்தானாசாரியர்களையும் மெய் கண்டதேவர் முதலிய புறச்சந்தா னாசாரியர்களையுமே கூறினார். அவ் வாறு கூறுங்காலத்து ஸ்ரீ மெய்கண்டதேவருக்குப் பின்னர் ஸ்ரீ அரு ணந்தி சிவத்தைச் சொல்லவேண்டிய விடத்தில் "பாதி விருத்தத்தால் இப்பார் விருத்தமாக வுண்மை சாதித்தார் பொன்னடியைத் தான் பணிவதெந்நாளோ" எனக் கூறினார். அருணந்தி சிவாசாரியர்செய்த நூல்கள் சிவஞான சித்தியாரும் இருபா இருபஃதுமே. அவற்றுள் இருபா இருபஃது வெண்பாவும் ஆசிரியப்பாவுமாம், சிவஞான சித்தி யார் தான் விருத்தப்பாவினா லாக்கப்பட்டுளது, ஆகவே பாதிவிருத்த மென்றது சிவஞானசித்தியாரினுள்ள பாதிவிருத்தத்தையே குறிக்கு மென்றவாறாயிற்று. சித்தியாரின் பெருமையை,

> "ஆறாறு தத்துவமும் ஆணவமும் வல்வினையும்
> நீறாக முத்திநிலை நிற்போர்க்குப்—பேறாக
> பார் விரித்த நூலெல்லாம் பார்த்தறியிற் சித்தியிலே
> ஓர் விருத்தப் பாதிபோதும்." எனச் சிவபோகசாரநூலு

டையார் புகழுமாற்றானுமறிக. அவரும்பாதி விருத்தமென்றேபுகழ்ந் தது இங்கே கவனிக்கத்தக்கது.

இனி அச்சித்தியாரினுள்ள பாதிவிருத்தந்தான்யாதோ? வெனின், அந்நூல் எட்டாஞ்சூத்திரம் இரண்டாமதிகரணம் முப்பதாவது செய் யுளில் அறியாமை அறிவகற்றி என்றதை முதலாகக்கொண்டு கூறி யிருப்பதிலுள்ள முற்பாதியேயாம். இம்முற்பாதியின் பொருளையே மௌனத்தினால் தனக்கு உபதேசிக்கப்பட்டதாகும், ஆதலினாற்றான் மௌனகுரு வணக்கத்தில் சிவஞானசித்தி வீறு நெறி எனப்பொது வாகக் கூறி மாபுவணக்கத்தில் பாதி விருத்த மெனச் சிறப்பித்தார்.

இன்னும்வரும்.

இங்ஙனம்:

பொ. முத்தைய பிள்ளை,
திருவாவடுதுறை ஆதீன
சைவப்பிரசாரகர்
தூத்துக்குடி.